உரோமாபுரியார் 1 12:21

தின்மையானது உன்னை ஷெஜயிக்க விடாதே. ஆனால் நீயே தின்மையை நன்மையால் ஷெஜயிப்பாயாக.

சங்கீதங்கள் 121:7-8

உன் வீரத்தில் சமாதானமும் உன் கோட்டைகளில் சம்பூரணமும் உண்டாவதாக. என் சகோதரரையும் என்னைச் சேர்ந்தாரையும் பற்றி உனக்காகச் சமாதானம் பேசினேன்.

எபேசியர் 6:11

நீங்கள் பசாசின் தந்திர சற்பனைகளுக்கு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாய் இருக்கும்படிக்குச் சர்வேசுரனுடைய போராயுதங்களை அணிந்துகொள்ளுங்கள். ( உரோ. 13:12.)

உரோமாபுரியார் 1 16:17

அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு ஒவ் வாத பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்கள்மேல் கண்ணாயிருந்து, நீங்கள் அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களை மன்றாடுகிறேன். (2 தெச. 3:14; 2 அரு. 10.)

எபேசியர் 6:12

ஏனெனில் நமக்குள்ள போராட்டம் மாம்சத்தோடும், இரத்தத்தோடு மல்ல; துரைத்தனங்களோடும் வல்லமைகளோடும் இந்த அந்தகார உலகாதி பதிகளோடும், ஆகாசமண்டலங்களி லுள்ள அக்கிரம அஷரூபிகளோடும் நாம் போராடவேண்டியிருக்கிறது. ழுழுழு 12. ஆகாச மண்டலம் என்பது வானமண்டலங்களின் கீழ்ப்பாகங்களாம். இவைகளில் சர்வேசுரன் தமது திருவுளத்தின்படிக்கு கெட்ட அஷரூபிகளை உலாவும்படி சிலவிசைகளில் உத்தரவு தருகிறார். நமது ஞான யுத்தம் மனிதரோடு அல்ல, கெட்ட அஷரூபிகளோடுதான்.

பழமொழியாகமம் 8:13

தேவ பயந் தீமையைப் பகைக் கின்றது; நானும் அகந்தையையும், ஆங்காரத்தையும், தீய வழியையும். இரட்டிக்கிற மொழியையும் நாவை யும் அரோசிக்கின்றேன்.

அர்ச். மாற்கு சுவிசேஷம் 7:20-23

மனிதனுடைய இருதயத்திலி ருந்து புறப்படுகிறவைகளே மனிதனை அசுத்தப்படுத்துகின்றன. ஏனெனில் மனிதனுடைய இரு தயத்துக்குள்ளிருந்து துர்ச்சிந்தனை களும், விபசாரங்களும், வேசித்தனங் களும், கொலைபாதகங்களும், களவுகளும், லோபித்தனங்க ளும், துஷ்டத்தனங்களும், கபடங்களும், காமவிகாரங்களும், வன்கண்ணும், தேவ தூஷணமும், ஆங்காரமும், மதிகேடும் புறப்படுகின்ற ன. (ஆதி. 6:5.) இந்தத் தின்மைகளெல்லாம் உள்ளத்தினின்று புறப்பட்டு, மனி தனை அசுத்தப்படுத்துகின்றன என்றார்.

உரோமாபுரியார் 1 12:9

உங்கள் சிநேகம் பாசாங்கற்றிருப் பதாக; தின்மையை வெறுத்து, நன்மை யைக் கைப்பற்றிக்கொள்ளுங்கள். (யாத். 20:14; உபாக. 5.18.)

எபேசியர் 4:26-27

(கோபிப்பதில்) பாவம் வராமல் கோபியுங்கள். உங்கள் கோபத்தின்மேல் சூரியன் அஸ்தமிக்காதிருக்கக்கடவது. (சங். 4:5.) பசாசுக்கு இடங்கொடாதிருங்கள். (இயா. 4:7.)

ஆதியாகமம் 50:20

நீங்கள் என்னைக் கெடுக்கச் சதி யோசனை பண்ணினீர்களே; ஆனால் தேவன் தின்மையை நன்மையாக மாற்றி, அநேக பிரஜைஜகளை இரட்சிக் கத்தக்கதாக, நீங்கள் இந்நேரத்திலே ஸ்பஷ்டமாய்க் கண்டறிந்தபடி என்னை உணர்த்தினார் (ஆதி. 45:5).

தெசலோனிக்கேயர் 1 5:21-22

ஆனால் எல்லாவற்றையும் பரிசோதித்து, நலமானதைக் கைப்பற்றிக்கொள்ளுங்கள். தின்மையாகத் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

தெசலோனிக்கேயர் 1 5:15

ஒருவரும் எவனுக்காவது தின்மைக்குத் தின்மை செய்யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுக்குள்ளும் மற்றெல்லாருக்குள்ளும் எப்போதும் நலமானதைச் செய்யும்படி நாடுங்கள். (பழ. 17:13; உரோ. 12:17.)

பழமொழியாகமம் 3:7-8

உனக்குத்தானே ஞானியா யிராதே; தேவனுக்குப் பயந்து தின்மை யினின்று விலகு (உரோ.12:16).

அப்பொழுது உன் திரேகத் திற்கு சுகம் இருக்கும்; உன் எலும்பு களும் நன்னீரால் இறைக்கப்படும்.

சங்கீதங்கள் 97:10

பழமொழியாகமம் 10:12

பகை சச்சரவுகளை எழுப்பு கின்றது; சிநேகமோ சகல பிழை களையும் மூடுகின்றது (1 கொரி. 13:4; 1 இரா. 4:8).

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 17:15

தேவரீர் அவர்களை உலகத்தினின்று எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் வேண்டிக்கொள்ளாமல், தின்மையினின்று அவர்களைக் காப்பாற்றும்படி (வேண்டிக்கொள்ளுகிறேன்).

இசாயாஸ் ஆகமம் 1:16

கரங்களைக் கழுவுங்கள், சுத்திசெய்யுங்கள்; எம் கண்கள் முன் னின்று உங்கள் கிரியைகளின் தீமையை அகற்றுங்கள், தீங்குச் செயலை ஒழியுங்கள் (1 இரா. 3:11)..

அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 1:5

அந்த ஒளி இருளில் பிரகாசிக்கின்றது. ஆயினும் இருளானது அதை ஒப்புக்கொள்ளவில்லை. (அரு. 3:19.)

சக்காரியாஸ் ஆகமம் 7:9-10

இதோ சேனைகளின் அதிபர் உரைத்தது: (ஆண்டவருக்குப் பிரியப்பட விருப்பமிருக்குமாயின்) மெய்யான சத்தியத்தைக் கோரி தீர்மா னங் கூறுங்கள்; ஒவ்வொருவனுந் தன் சகோதரன் மட்டில் இரக்கத்தையும், பிறர்சிநேகத்தையுங் காட்டுவானாக! (மிக். 6:8; மத். 23:23) விதவைக்கென்கிலும், (அநாத) பிள்ளைக்கென்கிலும், அந்நியனுக் கென்கிலும், ஏழைக்கென்கிலுந் துன் புறுத்த (நினைவுறாதிருக்கக்கடவான்;) எவனுந் தன் இருதயத்தில் தன் சகோதர னுக்குத் தீங்கு கருதாதிருக்கக்கட வான் (யாத்.22:22; இசா.1:23; எரே. 5:28).

சங்கீதங்கள் 34:14

நான் (ஒவ்வொருவனை) என் உறவினனைப் போலவும், சகோதர னைப் போலவும் பாவித்து நடந்து

(அவர்களுக்காகத்) துக்கித்துப் பிரலாபித்து இப்படியே கஸ்திப் பட்டுக்கொண்டிருந்தேன்.

### அருளப்பர் முதல் நிருபம் 1:9

நம்முடைய பாவங்களை நாம் சங்கீர்த்தனம்பண்ணினால், நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்துச் சகல அக்கிரமத்திலும் நின்று நம்மைப் பரி சுத்தமாக்குவதற்கு அவர் பிரமாணிக் கமும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

### சங்கீதங்கள் 119:133

### இயாகப்பர் பொது நிருபம் 1:21

ஆகையால் எவ்வித அசுசியை யும், துர்க்குணப் பெருக்கத்தையும் அகற்றி விட்டு, உங்கள் உள்ளத்தில் ஒட்டப்பட்டதும் உங்கள் ஆத்துமங்களை இரட்சிக்கக்கூடியதுமான வாக்கியத்தைச் சிரவணத்தோடு கைக்கொள்ளுங்கள். (1 இரா. 2:1; கொலோ. 3:8.)

### தீமோத்தேயு 2 4:18

சகல தீவினைகளிலும் நின்று ஆண்டவர் என்னை இரட்சித்தார். அவரே தம்முடைய பரம இராச்சியத்தில் என்னை க்ஷேமமாய்ச் சேர்த்தருளுவார். அவருக்கே அநவரத காலங்களிலும் மகிமை உண்டாகக்கடவது. ஆமென்.

### அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6:13

எங்களைச் சோதனையிலே பிர ' வேசிப்பியாதேயும், ஆனால் தின்மை யிலே நின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ஆமென். மூ 13. சோதனையிலே பிரவேசிப்பியாதேயும்:- அதாவது சோதனை வராமல் எங்களைக் காப்பாற்றியருளும். அப்படி வந்தாலும் அதற்குள் அகப்பட்டுப் பாவத்தில் விழாதபடி எங்களைத் தற்காத்தருளும் என்று அர்த்தமாம்.